P.R.NO: 37.

நாள்: 11.08.2017

# பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற கட்டுப்பாட்டு அறையிலிருந்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மூலம் டிவி நிகழ்ச்சிகளை குறைவான கட்டணத்தில் பொதுமக்களுக்கு ஒளிபரப்பி வருகிறது.

தற்போது மிக தரமான ஒளிபரப்பினை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மூலம் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய செட்டாப் பாக்ஸ் வழியாக பொதுமக்களுக்கு இலவசமாக விரைவில் வழங்க உள்ளது. எனவே பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பெற்று பயனடையலாம்.

பொதுமக்கள் தனியார் நிறுவனங்களின் செட்டாப் பாக்ஸை ஆப்பரேட்டர்கள் வற்புறுத்தலினால் விலை கொடுத்து வாங்குவதை தவிர்க்கவும்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மூலம் உரிமம் பெற்றுள்ள உள்ளூர் ஆப்பரேட்டர்களில் சிலர் அரசு கேபிள் டிவி இணைப்பை துண்டித்து தனியாருக்கு சாதகமாக பொதுமக்களை கட்டாயப்படுத்தி செட்டாப் பாக்ஸ் விநியோகம் செய்வதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும் உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகையினை உடனடியாக செலுத்தி இணைப்பு துண்டிப்பை தவிர்க்கலாம். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கும், அரசுக்கும், பொதுமக்களுக்கும் இழப்பீடு ஏற்படுத்தும் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் உரிமம் ரத்து செய்வதுடன் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்

திருநெல்வேலி.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருநெல்வேலி